*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 161/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.முத்தையன் த/பெ. தியாகராஜன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.05.2025.**

துவக்க நேரம் 01.00 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். சாட்சி சந்தியாவை தெரியும், எனது கொளுந்தியா ஆவார். ஆஜர் எதிரியை தெரியும், எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர்.

2) கடந்த 23.04.2023 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் நான் எனது தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது எனது மனைவி, எனக்கு போன் செய்து, சாட்சி சந்தியாவிடம், எதிரி வெங்கடேஷ் ஏண்டி தேவடியா, என் பொண்டாட்டி வளைகாப்பிற்கு நீ ஏன் வாழ்த்த வரல என்று கேட்டுள்ளார், அதற்கு சந்தியா உன் மனைவி வளைகாப்பிற்கு என் வீட்டில் உள்ளவர்களிடம் போய் சொல்லியிருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள் என்று சொல்லியுள்ளார், அதற்கு வெங்கடேஷ் எனக்கு சின்ன வயதிலிருந்தே உன் மேல ஆசை, நீதான் வேற பையன கல்யாணம் பண்ணிக்கிட்ட என்று சொல்லி சந்தியாவின் காதில் அடித்துள்ளார். சந்தியா வலி தாங்கமுடியாமல் சத்தம் போடவே அக்கம் பக்கம் இருப்பவர்கள் வந்ததாகவும், அதற்கு பின்னிட்டு நீ இன்னிக்கு தப்பிச்சிட்ட என்னைக்கா இருந்தாலும் உன் சாவு என்கையிலதான் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றதாகவும் என் மனைவி என்னிடம் தகவல் சொன்னார்.

3) காயம்பட்ட சந்தியாவை, எனது தம்பியான அவரது கணவர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படுகின்ற சந்தியாவும், இச்சம்பவம் குறித்து என்னிடம் நேரடியாக எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், ஏற்கனவே எதிரியின் மீதிருந்த முன்விரோதம் காரணமாக பொய்யாக கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.08 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.05.22 17:24:57 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 161/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-6)***

*Name / Father's Name:* ***திருமதி.லூர்துமேரி க/பெ. செல்வராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.05.2025.**

துவக்க நேரம் 01.09 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் உள்ள புதிய காலணியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சந்தியா, எனது மகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும், எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர்.

2) தேதி, மாதம் நினைவில்லை. சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இருக்கும், ஒருநாள் எனது மகள் சந்தியா இயற்கை உபாதை கழிக்க மாலை சுமார் 05.00-05.30 மணியளவில் சென்றார். சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்பொழுது எதிரி வெங்கடேஷ், எனது மகளை வழிமறித்து என் பொண்டாட்டிக்கு வளைகாப்பிற்கு நீ ஏன் வாழ்த்த வரல என்று கேட்டுள்ளார்.

3) அதற்கு சந்தியா உன் மனைவி வளைகாப்பிற்கு என் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் போய் சொல்லியிருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள் என்று சொல்லியுள்ளார், அதற்கு வெங்கடேஷ் நான் சின்ன வயசுலஇருந்தே உன்னை காதலிச்சுக்கிட்டு இருக்கேன், எனக்கு உம்மேல ஆசை, நான் உன்ன விடமாட்டன் என்று சொல்லியும், வாடி தேவடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டி, என் மனைவியை வந்து வாழ்த்திட்டுபோ என்று கையை பிடித்து இழுத்ததாகவும், அதற்கு சந்தியா மறுத்ததால், வெங்கடேஷ், சந்தியாவின் முடியை பிடித்து இழுத்து, அவர் காதில் அடித்துள்ளார். அதில் சந்தியாவின்

காதில் அணிந்திருந்த தோடின் திருகாணி வளைந்து, காதில் வலி அதிகமாக இருப்பதாக என்னிடம் சொன்னார். காயம்பட்ட சந்தியாவை, எனது மருமகன் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்.

4) சம்பவம் நடந்த மூன்று நாட்கள் கழித்து மதியம் 02.30 மணியளவில் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், நவீன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று நான் எங்கு இருந்தேன் என்றால் எனது வீட்டில்தான் இருந்தேன். சம்பவம் நடந்தது பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். இச்சம்பவத்தை பற்றி யார் என்னிடம் சொன்னது என்றால் எனது மகள் சந்தியாதான் சொன்னார்.

2) போலிசார் காவல் நிலையத்தில்தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை, சம்பவயிடத்தில்தான் கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, நான் படிக்கவில்லை, ஒருபக்கம் எழுதியிருந்ததில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், பின்னிட்டு சாட்சி எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்று கவனிக்கவில்லை என்று சாட்சியம் கூறுகிறார்.

3) நான் கையெழுத்து செய்த தாளில் எழுதியிருந்ததை என்னிடம் படித்துகாண்பித்தார்களா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு வந்து, படம் வரைந்த போலிசாரின் பெயர், பதவியின் விவரம் எனக்கு

தெரியுமா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாததால், எனக்கு வந்தவர்களின் விவரம் தெரியவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் போலிசார் வந்து விசாரணை செய்து எழுதியிருந்தால், என்ன எழுதியிருந்தார்கள் என்ற விவரத்தை எனக்கு யாராவது படித்து காண்பித்திருப்பார்கள் என்றாலும், நான் புகார்தாரர் எனது மகள் என்பதால் காவல் நிலையத்திற்கு சென்று கையெழுத்து செய்துவிட்டு, எனது மகள் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 01.27 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.05.22 17:25:06 +0530

Judicial Magistrate No.2, Attur.